பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

26 08 2024 12 40
திங்கட்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. புதிய சட்டங்கள் மற்றும் நீதித்துறை சீர்த்திருத்தங்கள் மூலம் புதிய இந்தியாவை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
2. லடாக் யூனியன் பிரதேசத்தில் ஐந்து புதிய மாவட்டங்களை உருவாக்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.
3. அமெரிக்கவாழ் இந்தியர்கள் இருநாடுகளுக்கும் இடையேயான நட்புறவை வளர்க்கும் பாலமாக திகழ்கிறார்கள் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் கூறியுள்ளார்.
4. பகவான் கிருஷ்ணர் அவதரித்த தினமான கிருஷ்ண ஜெயந்தி இன்று நாடு முழுவதும் உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.
5. பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் அடையாளம் தெரியாத நபர்கள் நடத்திய துப்பாக்கி சூட்டில் 23 பேர் உயிரிழந்தனர்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

நீதித்துறையில் சீர்திருத்தங்களை கொண்டு வர வேண்டியது காலத்தின் கட்டாயம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநில உயர்நீதிமன்றத்தின் 70-வது ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி, ஜோத்பூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அப்போது பேசிய அவர், தேவையற்ற சட்டங்களை களைந்து, புதிய சட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

சாதாரண மக்களுக்கு நீதி வழங்குவது எளிமையானதாகவும், தெளிவானதாகவும் இருக்க வேண்டும் என்று கூறினார்.

புதிய சட்டங்கள் மற்றும் சீர்த்திருத்தங்கள் மூலம் புதிய இந்தியா படைக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

நீதித்துறையில் புதிய தொழில்நுட்பங்கள் முக்கிய பங்காற்றி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

குறிப்பாக, நீதிமன்றங்கள் மின்னணுமயமாக்கப்படுவது மிகச் சிறந்த உதாரணம் என்றும் அவர் கூறினார்.

நாட்டில் 18 ஆயிரம் நீதிமன்றங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்தார்.

இதன் மூலம் சாதாரண மக்கள் அதிக அளவில் பயனடைந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தேசத்திற்கு முதலிடம் என்ற விதத்தில் உயர்நீதிமன்றங்கள் மற்றும் உச்சநீதிமன்றம் சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

**[]<<<>>>[]**

லடாக் யூனியன் பிரதேசத்தில் ஐந்து புதிய மாவட்டங்களை உருவாக்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.

ஜன்ஸ்கர், **drass, sham, nubra, chang thang** மஆகிய நகரங்களை தலைமையிடமாகக் கொண்டு இந்த புதிய மாவட்டங்கள் செயல்படும் என்று அவர் தமது சமூக வலைதளப்பதிவில் கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திரமோடியின் வழிகாட்டுதலின்பேரில் இந்த புதிய மாவட்டங்கள் அமைக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசின் சேவைகள் மக்களுக்கு அவர்களின் வீடுகளிலேயே கிடைக்கப்பெற வேண்டும் என்ற நோக்கில் புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

லடாக் மக்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பை உருவாக்கித்தர வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் இருப்பதாகவும் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

அமெரிக்க பயணம் மேற்கொண்டிருக்கும் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் நேற்று இந்திய வம்சாவளியினருடன் கலந்துரையாடினார்.

**Memphis,** அட்லாண்டா, நாஸ்வினி ஆகிய பகுதிகளில் வசிப்பவர்கள் பாதுகாப்புத்துறை அமைச்சருடன் கலந்துரையாடினர்.

அறிவியல், பொருளாதாரம், சமூக மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் அமெரிக்கவாழ் இந்திய மக்கள் சாதனை படைத்து வருவதாக அவர் பாராட்டு தெரிவித்தார்.

இந்தியாவுக்கும் - அமெரிக்காவுக்கும் இடையே ஒரு பாலமாக அவர்கள் திகழ்வதாகவும், இரு நாடுகளுக்கும் இடையே நெருங்கிய உறவையும், நல்லெண்ணத்தையும் ஏற்படுத்தும் வகையில் அவர்கள் செயல்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தேசப்பிதா மகாத்மா காந்தியை சிறப்பிக்கும் வகையில் அவரது நினைவாக இரண்டு வீதிகள் அமைக்கப்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

தேசிய சிவில் உரிமைகள் அருங்காட்சியகத்தில் மகாத்மாகாந்தியின் மார்பளவு சிலை நிறுவப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டி, காந்திஜியின் அஹிம்சை தத்துவத்துக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டிருப்பதாகவும் திரு ராஜ்நாத்சிங் குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல், சிங்கப்பூர் சென்றுள்ளார்.

சிங்கப்பூர் அரசுடன் இருதரப்பு வர்த்தக உறவுகள் மற்றும் முதலீகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துகிறார். மேலும் உலக வர்த்தக தலைவர்களை அவர் சந்தித்து பேசுகிறார்.

இரு நாடுகளுக்கு இடையிலான வர்த்தக ஒத்துழைப்புகள் மற்றும் முதலீட்டுக்கான வாய்ப்புகள் குறித்து அவர் விவாதிக்கவுள்ளதாக வர்த்தக அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களில் அதிக அளவில் முதலீடுகளை ஈர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை அவர் மேற்கொள்கிறார்.

சிங்கப்பூரில் அமைந்துள்ள தொழில் கல்வி நிறுவனத்தின் தலைமையிடத்திற்கு செல்லும் அவர், புதிய வாய்ப்புகள் குறித்து அமைச்சர் விவாதிக்கவுள்ளார்.

**[]<<<>>>[]**

பகவான் கிருஷ்ணர் அவதரித்த தினமான கிருஷ்ண ஜெயந்தி இன்று நாடு முழுவதும் உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, கிருஷ்ணர் ஆலயங்களில் சிறப்பு பூஜைகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கிருஷ்ணர் பிறந்த உத்தரபிரதேச மாநிலம், மதுராவில் உள்ள பிருந்தாவன் விழாக்கோலம் பூண்டுள்ளது.

அங்குள்ள கிருஷ்ணர் கோவில் வண்ண மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டுள்ளது.

ஏராளமான பக்தர்கள் அங்கு வழிபாடு செய்வதற்காக குவிந்துள்ளனர்.

கோகுலாஷ்டமியையொட்டி குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு மக்களுக்கு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் பகவான் கிருஷ்ணரின் போதனைகளை பின்பற்றி நடக்க வேண்டுமென்று கூறியுள்ளார்.

நாட்டின் வளர்ச்சிக்காகவும், அர்ப்பணிப்பு உணர்வோடு பாடுபட வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் விடுத்துள்ள செய்தியில், ஜன்மாஷ்டமி ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்த பண்டிகை என்றும், காலத்தால் அழியாத பகவான் கிருஷ்ணரின் போதனைகளை பின்பற்றி அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்காக பாடுபட வேண்டுமென்று கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திரமோடி சமூக வலைதளப்பதிவில் நாட்டு மக்கள் அனைவருக்கும் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 115 கோடி ரூபாய் மதிப்பில் ஆறு புதிய திட்டப்பணிகளுக்கு முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டினார்.

சுமார் ஐந்து கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்றப் பணிகளையும் அவர் தொடங்கி வைத்தார்.

கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையம், சமுதாய நலக்கூடம், சென்னை புரசைவாக்கம் கான்ட்ரான் ஸ்மித் சாலை ஆகிய இடங்களில் நவீன சலவைக்கூடங்கள் அமைத்தல், புழல், ரெட்டேரி மற்றும் கொளத்தூர் ஏரிகளை மேம்படுத்துதல் ஆகிய வளர்ச்சித் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

**[]<<<>>>[]**

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் அடையாளம் தெரியாத நபர்கள் நடத்திய துப்பாக்கி சூட்டில் 23 பேர் உயிரிழந்தனர்.

அம்மாகாணத்தில் முசாகேல் மாவட்டத்தில் வாகனங்களை நிறுத்தி அந்த நபர்கள் அடையாள அட்டைகளை சோதனை செய்ததாகவும், பின்னர் துப்பாக்கிசூடு நடத்தியதாகவும் முசாகேல் மாவட்ட காவல்துறை துணை ஆணையர் தெரிவித்தார்.

மாகாணங்களுக்கு இடையேயான நெடுஞ்சாலையில் வாகனங்கள், பேருந்துகள் ஆகியவற்றை நிறுத்தி அடையாள அட்டைகளை சோதனையிட்டதாகவும் அவர் கூறினார்.

உயிரிழந்தவர்கள் பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்தவாக்ள் என்றும் அவர் தெரிவித்தார்.

துப்பாக்கிசூடு நடத்திய பின் பத்து வாகனங்களுக்கு அவர்கள் தீ வைத்ததாகவும் காவல்துறையினர் தெரிவித்தனர்.

தற்போது அப்பகுதியில் காவல்துறையினர் தீவிர சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

**[]<<<>>>[]**

இந்தியா கடற்படையின் போர்க்கப்பலான ஐ என் எஸ்-மும்பை மூன்று நாள் பயணமாக இன்று இலங்கை சென்றடைந்தது.

ஐஎன்எஸ்-மும்பை கப்பல் அந்நாட்டிற்கு செல்வது இதுவே முதல் முறையாகும்.

இந்த பயணத்தின்போது, இலங்கை கப்பற்படையின் ரியர் அட்மிரல் குமரசிங்கே-வை, ஐ என் எஸ்-மும்பை கப்பலின் கமாண்டிங் ஆபிஸர் சந்தித்து பேசுகிறார்.

இந்த கப்பல் மூலமாக இலங்கை விமானப்படைக்கான டார்னியர் போர் விமானத்துக்கான உதிரி பாகங்கள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இருநாட்டு கடற்படைக்கும் இடையே விளையாட்டுப் போட்டிகள், யோகாசன பயிற்சி மற்றும் கடற்கரை தூய்மைப்பணி போன்வற்றில் கூட்டாக செயல்படுபது குறித்து ஆலோசனை நடத்தப்படவுள்ளது.

கொழும்பு மற்றும் காலே பகுதிகளில் உள்ள முக்கிய இடங்களையும் போர்க்கப்பல் மூலமாக சென்றுள்ள இந்திய கடற்படையினர் பார்வையிடவுள்ளனர்.

வரும் 29-ஆம் தேதி ஐ என் எஸ்-மும்பை மூன்று நாள் பயணத்தை முடித்துக் கொண்டு இந்தியா திரும்பவுள்ளது.

**[]<<<>>>[]**

பங்ளாதேஷ் தலைநகர் டாக்காவில் மாணவர்களுக்கும், அன்சார் போராட்டக்காரர்களுக்கும் இடையே நடந்த மோதலில் 30 பேர் காயமடைந்தனர்.

மத்திய தலைமைச் செயலகத்துக்கு அருகே நேற்று இரவு ஒன்பது மணி அளவில் இந்த மோதல் நிகழ்ந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

[]<<<>>>[]

பிரேஸில் நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. **Mauro Vieira** நான்கு நாள் பயணமாக புதுதில்லி வந்துள்ளார்.

இந்தியா – பிரேஸில் இடையேயான உறவுகளை வலுப்படுத்தும் விதத்தில் அவரது பயணம் அமைந்திருப்பதாக வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று புதுதில்லியில் நடைபெறும் 9-வது இந்திய – பிரேஸில் கூட்டுக்குழு கூட்டத்தில் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், பிரேஸில் வெளியுறவு அமைச்சர் திரு. **Mauro Vieira** ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

[]<<<>>>[]

மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான், குஜராத், மஹாராஷ்ட்ரா மற்றும் கோவாவில் அடுத்த மூன்று நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மத்தியப்பிரதேசத்தின் வடமேற்கு மற்றும் ராஜஸ்தானின் கிழக்குப் பகுதியில் நிலவிவரும் காற்றழுத்த தாழ்வுப் பகுதி, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதியாக மாறியுள்ளது.

இது, தெற்கு ராஜஸ்தான், குஜராத், சௌராஷ்ட்ரா, கட்ச் ஆகிய பகுதிகளுக்கு நகரக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

காத்மாண்டுவில் நடைபெற்று வரும் 20 வயதுக்குட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து போட்டியில் இன்று நடைபெறவுள்ள அரையிறுதிப் ஆட்டத்தில் இந்திய அணி – பங்களாதேஷ் அணியை எதிர்கொள்கிறது.

**[]<<<>>>[]**

யு.எஸ். ஓப்பன் டென்னிஸ் போட்டிகள் இன்று தொடங்குகின்றன.

இந்தியாவின் சார்பில் சுமித் நாகல், ரோஹன் போபண்ணா ஆகியோர் பங்கேற்கின்றனர்.